# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 212/மா/2024**
**நாள்: 12.09.2025**

| | | |
|---|---|---|
| திரு. B. சரவணன்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர்,<br>மண்டலம்–10<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 25.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.10.2024 அன்று பெறப்பட்டு 212/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவர் தனது 25.10.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மேற்காணும் முகவரியில் வசிக்கும் நான் பொதுமக்களுக்கான பொது பணிகளை சட்டரீதியாக செய்து வருவதற்கான சான்று என்னிடம் உள்ளது. மேலும் நான் தெரிவிப்பது, அசோக் நகர் 3வது அவின்யூவில் ரமணி பில்டர் என்கிற கட்டிடம் கட்டி வருகிறது (அனுகிரஹா). ரமணி பில்டர் கட்டுமான நிறுவனம் பொது மரத்தினை வெட்டி உள்ளனர். தனது சுயநலன் அடைவதற்காக சுமார் 50 ஆண்டுகள் பழமையான மிகவும் வலிமையான மரத்தினை இரவோடு இரவாக வெட்டி சாய்த்து உள்ளார்கள். இதனை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைபடத்தில் காணலாம். இது சம்பந்தமாக அங்கு உள்ள பொது மக்களிடம் இது பற்றி விசாரித்த போது அங்கு உள்ள கட்டுமான (உரிமையாளர்) நிறுவனர்கள் தான் ஆட்களை வர வைத்து மரத்தை திட்டம் இட்டு இந்த மரத்தினால் தங்களின் கட்டிடத்திற்கு பார்வை இல்லாமல் விளம்பரப்படுத்தவும் கவனங்கள் கட்டுமான அடுக்குமாடி குடியிருப்புக்கு இம்மரம் தடங்கலாக இடையூறாக உள்ளது என்று கெட்ட எண்ணத்தில் வெட்டி சாய்த்து விட்டதாக கூறுகிறார்கள் மற்றும் மனுதாரராகிய நானும் அங்கு சென்று பார்த்தபோது இந்த மரத்தை அடிவேறுடன்

அகற்றி கொண்டு ஒரு, ஒரு பகுதியாக வெட்டி கொண்டு இருந்தார்கள். நான் அருகில் சென்று அவர்களிடத்தில் விசாரித்தபோது மரம் உள்ள இடத்தில் அந்த கட்டிடங்களை சுற்றியும் காம்பவுண்ட் சுவர்கள் கட்ட போவதாகவும், அந்த பணிகள் இப்போது ஆரம்ப நிலையில் உள்ளது என்பதையும் சுட்டி காட்டுகிறேன். எனவே இது போல் இழிவான செயல்களை செய்த இக்கட்டிட உரிமையாளர் நிறுவனர் மீது தகுந்த கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர், மண்டலம் 10 தனது 11.06.2025 நாளிட்ட கடிதம் ம.அ.10. ந.க. எண்.212/மா/2024–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"திரு.சரவணன் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, பகுதி 31, கோட்டம் 135 அசோக் நகர் 3வது அவின்யூ, ரமணி பில்டர் என்ற நிறுவனம் மூலம் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்த கட்டுமான நிறுவனமானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 50 ஆண்டுகள் பழமையான பொது மரத்தினை வெட்டி அகற்றியுள்ளனர் எனவும், இப்புகார் மீது எந்தவித நடவடிக்கையும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அசோக் நகர் 3வது அவின்யூ என்ற முகவரியில் ரமணியம் பில்டர் என்ற நிறுவனம் மூலம் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டிடத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கட்டிடம் கட்டும் சாலையில் சாய்ந்த நிலையில் இருந்த மரம் வெட்டி அகற்றப்பட்டது தெரிய வந்தது. மேலும் விசாரணையில் குடியிருப்பு கட்டுமான பகுதியில் கீழ்நிலை நீர் தொட்டி அமைக்க தோண்டப்பட்ட பகுதியில் இருந்த வேர்கள் அகற்றப்பட்டதால், ஏற்கனவே சாலையோரம் சாய்ந்த நிலையிலிருந்து மரம் வலுவிழந்து சாய்ந்தது தெரிய வந்தது. மேலும் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததால் மாநகராட்சி பணியாளர்களால் இந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டது.

எனவே, மண்டலம் 10 பூங்கா மேற்பார்வையாளர் மூலம் அனுமதியின்றி வெட்டப்பட்ட மரத்திற்கு 25,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 12.09.2024 அன்று ரமணியம் பில்டர் என்ற நிறுவனம் அபராத தொகையாக ரூ.25,000/–ஐ ஆக்சிஸ் பேங்க் லிட் கேட்பு காசோலை எண் 004192, தேதி 12.09.2024 வாயிலாக ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி வங்கி கணக்கில் செலுத்தியது என்ற தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் அபராதம் செலுத்திய காசோலையின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய கூற்றுப்படி, மனுதாரரின் புகாரானது பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 23.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 07.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"அசோக் நகர் 3வது அவின்யூவில் ரமணி பில்டர் என்கிற கட்டிடம் கட்டி வருகிறது (அனுகிரஹா) ரமணி பில்டர் இந்நிறுவனம் தனது சுய நலத்திற்காக சுமார் 50 ஆண்டுகள் பழமையான மிகவும் வலிமையாக இரண்டு மரமாக இருந்ததை இரவோடு இரவாக வெட்டி சாய்த்து உள்ளார்கள். இது சம்பந்தமாக அங்கு உள்ள பொது மக்களிடம் இது பற்றி விசாரித்த போது அங்கு உள்ள கட்டுமான (உரிமையாளர்) நிறுவனர்கள் தான் ஆட்களை வர வைத்து மரத்தை திட்டமிட்டு, இந்த மரத்தினால், தங்களின் கட்டிடத்திற்கு விளம்பர படுத்தவும் கட்டுமான அடுக்குமாடி குடியிருப்புக்கு இம்மரம் தடங்கலாக இடையூறாக உள்ளது என்று படிப்படியாக வெட்டி அங்கு காம்பவுண்ட் சுவரும் கட்டிவிட்டார்கள்.

இதை நான் நேரில் பார்த்து ஊர்ஜிதம் செய்து கொண்டேன். நான் அவர்களிடத்தில் விசாரித்தபோது மரம் உள்ள இடத்தில் காம்பவுண்ட் சுவர்கள் கட்ட போவதாகவும் கூறினார்கள். இந்த செயலை செய்த இக்கட்டிட நிறுவனத்தினர் மீது அனுமதியின்றி வெட்டப்பட்ட பழங்கால மரத்திற்கு உரிய அபராதத் தொகை கட்டுமான நிறுவனத்திடமிருந்து வசூலிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் பூங்கா மேற்பார்வையாளர் 07.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அசோக்நகர் 3வது அவின்யூ என்ற முகவரியில் ரமணியம் பில்டர் என்ற நிறுவனம் மூலம் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டிடத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கட்டிடம் கட்டும் சாலையில் சாய்ந்த நிலையில் இருந்த மரம் வெட்டி அகற்றப்பட்டது தெரிய வந்தது. மேலும் விசாரணையில் குடியிருப்பு கட்டுமான பகுதியில் கீழ்நிலை நீர் தொட்டி அமைக்க தோண்டப்பட்ட பகுதியில் இருந்த வேர்கள் அகற்றப்பட்டதால், ஏற்கனவே சாலையோரம் சாய்ந்த நிலையிலிருந்து மரம் வலுவிழந்து சாய்ந்தது தெரிய வந்தது. மேலும் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததால் மாநகராட்சி பணியாளர்களால் இந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டது. எனவே, மண்டலம்10, பூங்கா மேற்பார்வையாளர் மூலம் அனுமதியின்றி வெட்டப்பட்ட மரத்திற்கு 25,000 ரூபாய் பெருநகர சென்னை மாநகராட்சி வழிகாட்டுதலின்படி அபராதம் விதிக்கப்பட்டது. அதன் நகலை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன். 12.09.2024 அன்று ரமணியம் பில்டர் என்ற நிறுவனம் அபராத தொகையாக ரூ.25,000/–ஐ 12.09.2024 அன்று ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் பூங்கா மேற்பார்வையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

அசோக் நகர் 3வது அவின்யூவில் (அனுகிரஹா) ரமணி பில்டர் என்கிற கட்டிடம் கட்டி வருகிறது என்பதும், அந்நிறுவனம் சுமார் 50 ஆண்டுகள் பழமையான மிகவும் வலிமையான இரண்டு மரங்கள் இருந்ததை, தங்களின் கட்டிடத்திற்கு விளம்பர படுத்தவும், அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு இம்மரங்கள் தடங்கலாக மற்றும் இடையூறாக உள்ளது என்று படிப்படியாக வெட்டப்பட்டு, அங்கு காம்பவுண்ட் சுவர் கட்டப்படுகிறது என்பதும், இந்த செயலை செய்த இக்கட்டிட நிறுவனத்தினர் மீது, அனுமதியின்றி வெட்டப்பட்ட பழங்கால மரத்திற்கு உரிய அபராதத் தொகை கட்டுமான நிறுவனத்திடமிருந்து வசூலிக்குமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

அசோக்நகர் 3வது அவின்யூ என்ற முகவரியில் ரமணியம் பில்டர் என்ற நிறுவனம் மூலம் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டிடத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இக்கட்டிடம் கட்டும் சாலையில் சாய்ந்த நிலையில் இருந்த மரம் வெட்டி அகற்றப்பட்டது தெரிய வந்தது என்பதும், விசாரணையில் குடியிருப்பு கட்டுமான பகுதியில் கீழ்நிலை நீர் தொட்டி அமைக்க தோண்டப்பட்ட பகுதியில் இருந்த வேர்கள் அகற்றப்பட்டதால், ஏற்கனவே சாலையோரம் சாய்ந்த நிலையிலிருந்து மரம் வலுவிழந்து சாய்ந்தது தெரிய வந்தது என்பதும், போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததால் மாநகராட்சி பணியாளர்களால் மேற்கண்ட மரம் அகற்றப்பட்டது என்பதும், ரமணியம் பில்டர் நிறுவனத்தால் அனுமதியின்றி வெட்டப்பட்ட மரத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி வழிகாட்டுதலின்படி ரூ.25,000/– அபராதம் விதிக்கப்பட்டு, அந்நிறுவனம் அபராதத் தொகையான ரூ.25,000/–ஐ ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் பூங்கா மேற்பார்வையாளரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அசோக்நகர் 3வது அவின்யூ என்ற முகவரியில் ரமணியம் பில்டர் என்ற நிறுவனம் மூலம் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டிடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், ரமணியம் பில்டர் நிறுவனத்தால் அனுமதியின்றி வெட்டப்பட்ட மரத்திற்கு, மனுதாரர் கோரியவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் பூங்கா மேற்பார்வையாளரால் பெருநகர சென்னை மாநகராட்சி வழிகாட்டுதலின்படி ரூ.25,000/– அபராதம் விதிக்கப்பட்டு, அந்நிறுவனத்தால் அத்தொகை பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதால், மனுதாரரின் மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என இம்முறைமன்றம் முடிவு செய்துஅவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1, புது தெரு,
கண்ணம்மாபேட்டை,
தியாகராய நகர்,
சென்னை–600 017.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.